ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன் – மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. – ம.கிரகாம்பெல் கூட்டறிக்கை!







நெல்லை, அக். 29 -

நெல்லை மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை, மற்றும் விலைவாசி உயர்வு த.வெ.க.அரசை கண்டித்து திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு (31.10.2026 சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.என ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட பொறுப்பாளர்கள் இரா. ஆவுடையப்பன் (மேற்கு) மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ. (மத்திய) ம.கிரகாம் பெல் (கிழக்கு) ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதில் அவர்கள் கூறியிருப்பதாவது.

கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி,

தமிழகத்தின் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பததொடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இது போன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும்,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும்,விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து திருநெல்வேலி மாவட்ட தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 அன்று சனிக் கிழமை காலை 10.00 மணியளவில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்,நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் – மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. கூட்டறிக்கை!





தென்காசி, அக். 29 -

தென்காசி மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு,பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு த.வெ.க.அரசை கண்டித்து தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் (31.10.2026 - சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தலைமையில் நடைபெறுகிறது என ஒருங்கிணைந்த தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் அவர்கள் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி,

தமிழகத்தின் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பததொடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இது போன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும்,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுபடுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க.அரசை கண்டித்து தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில்மாநில,மாவட்ட கழகநிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

த.வெ.க. அரசைக் கண்டித்து ஒருங்கிணைந்த தூத்துக்குடி வடக்கு – தெற்கு மாவட்ட

மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, அக். 29 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது..

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பதோடு, குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும்



த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அரசே ஆவின் பால் மற்றும் ஆவின் உப பொருட்களின் விலையை உயர்த்துகிறது.

இந்நிலையில் தி.மு.க. தலைமை கழக ஆணைக்கிணங்க, த.வெ.க. அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு மற்றும்தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில் வருகிற 31.10.2026 சனிக் கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் மாபெரும் "கண்டன ஆர்ப்பாட்டம்" சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் எதிரில், நாம் தமிழர் வளாகத்தின் அருகில் வைத்து நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி வடக்கு, மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், குறிப்பாக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்றிட அழைக்கிறேன்.

கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றிய த.வெ.க அரசைக் கண்டித்து கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு கண்டனங்களை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு - பெண்கள், குழந்தைகள்

பாதுகாப்பின்மை - விலைவாசி உயர்வை கண்டித்து கடலூரில் மகளிர் ஆர்ப்பாட்டம்!

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 29 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர்கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழு தலைவர் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராசாத்தி கருணாநிதி எம்.பி., அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை, விலைவாசி உயர்வு ஆகியவற்றை கண்டித்து வரும் 31.10.2026 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில், கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரி ராஜா அவர்களின் தலைமையில், கடலூர்



கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.த.அமுதராணி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திரு மதி.ப.மனோரஞ்சிதம் கடலூர் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் திரு மதி.சுதாசம்பத், பொதுக் குழு உறுப்பினர் திருமதி. ர.மஞ்சு, கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. ஜெயந்தி நடராஜன், கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அமைப்பாளர் திருமதி. இந்துமதி மனோகரன், கடலூர் மேற்கு மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் திருமதி. ஆனந்தி சரவணன், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. செந்தமிழ் செல்வி கருப்புசாமி ஆகியோர்

மற்றும் மாவட்ட மகளிர், மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் முன்னிலையில், பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ் நாட்டை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆர்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.,அவர்களும், கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல். ஏ., ஆகிய நாங்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றுகின்றோம்.

அது சமயம் ஆர்பாட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் – நாளை

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா! சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை, அக். 29 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (30.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில், தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருநெல்வேலி சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது.

என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

சிறப்புமிகு இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் 3 பள்ளிச் சிறுமிகள் மாயம்!

திருவண்ணாமலை, அக்.29–

திருவண்ணாமலை மாவட்டம் தண்டாரம்பட்டு பகுதியில் 3 பள்ளிச் சிறுமிகளை காணவில்லை என புகார் அளிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள ஆலம்பூண்டி கிராமத்தை சேர்ந்த வடிவேலு–பவானி தம்பதியினரின் 2–வது மகள் ஹேமலதா என்கிற ஹேமாவதி (வயது 7). கடந்த 11–ந் தேதி தன்னுடைய பிறந்த நாள் விழாவை கொண்டாடி விட்டு பெற்றோருடன் படுத்து தூங்கினாள். மறுநாள் அதிகாலை 5.30 மணியளவில் பெற்றோர் எழுந்து பார்த்தபோது ஹேமலதாவை காணவில்லை. பல்வேறு இடங்களில் பெற்றோர், உறவினர்கள் தேடிப் பார்த்தும் சிறுமி கிடைக்கவில்லை.

இதுகுறித்து சிறுமியின் தாய் பவானி கொடுத்த புகாரின் பேரில் சத்தியமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். சிறுமியை கண்டுபிடிக்க 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு பல்வேறு கோணங்களில் தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டது. இருப்பினும் சிறுமியை பற்றிய எந்தவொரு தடயமும் சிக்காத தால் இவ்வழக்கு சி.பி.சி. ஐ.டி. போலீசாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

சிறுமி காணாமல் போய் இன்றுடன் 16 நாட்கள் ஆகும் நிலையில் அவளை பற்றிய எந்தவொரு துப்பும் துலங்காததால் கிராம மக்கள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர். தொடர்ந்து, நேற்றும் 5–வது நாளாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை தொடர்ந்தனர். சிறுமியின் தாய், தந்தை, பாட்டி மற்றும் உறவினர்களிடம் தனித் தனியாக துருவி, துருவி விசாரணை நடத்தினர். செஞ்சி சிறுமி காணாமல் போன வழக்கில், தற்போது ஆர்காம் பூண்டி எனும் பகுதியில் வீட்டில் பதிவான சிசிடிவி காட்சிகளை சிபிசிஐடி ஆய்வு செய்து வருகின்றனர்.



சேலம் மத்திய மாவட்டக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 28.10.2026 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக்கழக அலுவலகம் "கலைஞர் மாளிகையில் மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன், கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி, பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து தி.மு.க . மகளிர் அணி சார்பில் 31.10.2026 அன்று நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் நிர்வாகிகள் மற்றும் பெண்கள் அனைவரும் பெரும்திரளாக தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றியக் கழக செயலாளர்கள். பகுதிகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள் செயலாளர்கள், மாநகரத்தில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வடுவூர் இரா.சாமிநாதன்

அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.